# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 30.06.2022 ம் தேதி நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

1. தமிழ்நாடு அரசு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற மானியம் கோரிக்கை அறிவிப்பு எண் .34 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிப்பு பத்தி 22–இன் படி கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நி லையம் மேம்பாடு செய்யும் பணி ரூ .60.00 இலட்சம் மதிப்பீட்டில் 6 கடைகள் பயணிகள் நடைபாதை அமரும் இடம் பேருந்து நுழையும் மற்றும் வெளியேறும் பகுதியில் Gantry Sign Board அமைக்கவும் கட்டுமான பணி மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவு ம் I & A 2022–23 (Infrastructure & Amenties) திட்டத்தின் கீழ் செயல்படுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று செயல்படுத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ)நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதியில் ஒதுக்கிடு மானியம் போக மீதம் உள்ள தொகைக்கு நகராட்சி பொதுநிதியில் இருந்தோ அல்லது இதர திட்ட நிதியிலிருந்தோ செலவழிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு (அ) மற்றும் (ஆ) அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.195**

2. தமிழ்நாடு அரசு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்க ளின் சட்டமன்ற மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் .34 2022–23 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிப்பு படி கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான மொடச்சூர் வாரச்சந்தையில் (வார்டு – சி, பிளாக் –25, நகரளவை எண்.51) பழுதாகி உள்ள பழைய ஏ.சி.சீட் ரூப் கொட்டகை இடித்துவிட்டு புதிதாக 80 கடைகள் Pre Engineered Steel Building கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ .1.75 கோடி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–23 இன் கீழ் நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக இயக்குந ர், சென்னை அவர்களிடம் பெற்று செயல்படுத்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மானியமாக பெற்று செயல்படுத்தலாம்.

இ) இதில் நிதி ஒதுக்கீடு மானியம் போக மீதத்தொகை இதர திட்ட நிதியிலிருந்தோ அல்லது பொதுநிதியிலிருந்து செலவழிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு (அ), (ஆ)மற்றும் (இ) அனுமதிக்கப்பட்டது.மன்றத்தீர்மான எண்.196**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி